**புத்தளம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் புத்தளம் நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்காக பெற வேண்டிய சம்பள மீள்நிரப்பல் ரூபா 72,000 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | இது தொடர்பாக உண்மையை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | சபைக்கு சொந்தமான 67 சொத்துக்களின் பெறுமதிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | சொத்துக்களின் உரிமை சட்டரீதியாக கிடைத்த பின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | பேரூந்து தரிப்பிட விளம்பர பலகையை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 584,000 ஆன பெறுமதி கடன் கொடுனரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020.01.01 திகதிய ஜர்னல் வவுசர் இலக்கம் 680 மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iv) | 2018 ஆண்டிற்காக முத்திரைக் கட்டணம் சிட்டையிடப்பட்ட அளவை விஞ்சி கிடைத்திருந்த ரூபா | முத்திரை கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ரூபா 3,217,601 ஆன முத்திரைக் கட்டணத்தை உரிய கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | 3,217,601 இனை திரண்ட நிதி கணக்கிற்கு செம்மையாக்க வேண்டிய போதும், முத்திரைக் கட்டண கணக்கில் குறிப்பிட்டதனால் அப் பெறுமானத்தினால் முத்திரைக் கட்டண நிலுவை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | செம்மையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (v) | கடன் கொடுனராக உறுதிப்படுத்த முடியாத ரூபா 588,777 வழங்கல் கடன் கொடுனர் மறை மீதியொன்றாக பிழையாக கணகீடு செய்தமையால் நிதி நிலைமை கூற்றில் கடன் கொடுனர் பெறுமதி அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | உரிய கொடுப்பனவு தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினால் நகர சபையை விடுவித்திருந்த போதும், ஒப்பந்தகாரர் ஒருவரிற்கு வழங்கப்பட்டிருந்த பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக பதிலீடு செய்ய முடியாத ரூபா 3,516,397 ஆன வரி தொகையொன்று அறவிடப்பட முடியுமான மீதியொன்றாக கணக்குகளில் காட்டப்படடிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | இத் தொகையை அறவிடுதல் தொடர்பாக உள்நாட்டு இறைவரி தினைக்களத்தின் வரி சட்ட பிரிவிற்கு சென்று கலந்துரையாடி முன் நடவடிக்கை மேற்கொள்கிறேன். |
| (vii) | அறவிட முடியுமான மீதியொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மேல் (vi) இல் குறிப்பிடப்பட்ட ரூபா 3,516,397 ஆன வரி தொகையை நிதி நிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய வைப்பின் கீழ் மறை மீதியொன்றாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மேல் பெற வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பாக திட்டவட்டமான தீர்மானமொன்றை எடுத்த பின் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (viii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஊழியர் பிணை வைப்பு கணக்கு மற்றும் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கிற்கும் இடையில் ரூபா 22,570 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | குறித்த பிழைகளை சரி செய்து கணக்கு மீதிகள் இடையிலான வித்தியாசத்தை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ix) | அமைய உழியர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 55,081 இனை அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது அறவிடப்பட்ட வரி எனும் வருமான கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக அப் பெறுமதியால் குறித்த செலவு மற்றும் வருமானம் குறைத்து காட்டப்படடிருந்தது. | காலப்பகுதிக்குரிய வருமானம் மற்றும் செலவுகள் சரியாக கணக்குகளில் செம்மையாக்கல் செய்ய வேண்டும். | அமைய ஊழியர்களுக்காக ரூபா 55,081 ஆன அமைய கொடுப்பனவு செலுத்துதல் (செலவு) அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது அறவிடப்படும் வரி கணக்கில் (வருமானம்) |

| | | | |
|---|---|---|---|
| | | | குறிப்பிட்டதால் தவறு ஏற்பட்டுள்ளது. எதிர் காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (x) | நிதி நிலைமை கூற்றில் நீண்ட கால பொறுப்பின் கீழ் ஆண்டு இறுதியில் காட்டப்பட்டிருந்த ரூபா 173,168,385 ஆன இலாப நட்ட மீதிக்காக பேரேட்டுக் கணக்கொண்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருட ஆரம்ப இலாப நட்ட மீதியிற்கு மீளாய்வாண்டின் இலாபத்தை செம்மையாக்கியதன் பின் மீதி ரூபா 173,622,615 ஆன போதும் இம் மீதிகளிற்கிடையில் ரூபா 454,230 வித்தியாசம் நிலவியது. | அனைத்து கணக்கு உறுப்புகளுக்கும் உரியதாக பேரேட்டுக் கணக்கொன்றை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மென்பொருள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதி நிலைமை கூற்றில் சகல மீதிகளிற்கு உரியதாக பேரேட்டு கணக்கொன்றை மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமாயிருந்த போதும் அங்கு இலாப/நட்ட ஆக காட்டப்பட்டிருந்த மீதிக்காக கணக்கொன்றை மென்பொருளினூடாக பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. |
| (xi) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று எல்பா வியாபார கட்டிடத் தொகுதியிலிருந்து பெற வேண்டிய டென்டர் வருமானம் ரூபா 96,271,601 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதும், அவற்றில் ரூபா 57,757,000 கடந்த ஆண்டுகளுக்கான டென்டர் வருமானமாகும். அதன் பிரகாரம் அப் பெறுமதியினால் மீளாய்வாண்டு வருமானம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019.12.31 திகதியன்று எல்பா வியாபார கட்டிடத் தொகுதியிலிருந்து பெறவேண்டிய டென்டர் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 96,271,601 பெறுமதிக்கான தகவல்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். |
| (xii) | எல்பா வியாபார கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய பெறுமதியை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய கடன் கொடுனர்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் | 2020 இறுதி கணக்குகள் தயாரிக்க முன் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு கணக்கு விடயத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை/ உபயோக ஏடுகள் பிரகார மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கிடையிலான இணங்காமை கூட்டுத் தொகை ரூபா 171,707 | ஊழியர் பிணை கணக்கு மற்றும் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கை சரி செய்ய வேண்டும். | 2020 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இத் தவறை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

ஆகக் காணப்பட்டது.

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 335,967,462 ஆனதுடன் அவற்றில் 03 வருடங்களை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் ரூபா 107,270,511 காணப்பட்டது. மேலும் அத்திகதியன்று ஏனைய கடன்படுனர் அட்டவணை பிரகாரம் 2009 ஆண்டிற்கு முன்னரிலிருந்து பெற வேண்டியதாக இருந்த ரூபா 21,590,806 வை அறவிடுவது நிச்சமற்றதாக இருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நிலுவை மீதிகள் பல வருட காலமாக இறுதி கணக்குகளில் காட்டப்படுவதாகவும் பயன்படுத்தும் கணனி மென்பொருளின் வழு காரணமாக ஏற்பட்ட பிழையான கணிப்பீட்டிற்குரிய சீராக்கல் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், இனங்கண்ட நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 திகதியில் செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 76,844,905 ஆனதுடன் அவற்றில் 03 வருடங்களை விஞ்சிய செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 42,176,641 ஆகக் காணப்பட்டது. | மேலும் செலுத்த வேண்டிய கடன்கொடுனர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓய்வூதிய பணிப்பளர் மற்றும் கணக்காய்வாளரிற்கு செலுத்த வேண்டிய தொகை தவனைகளாக மாதாந்தம் வங்கி நிலையான கட்டளையூடாக கொடுப்பனவு செய்யப்படுவதுடன், செலுத்த வேண்டிய எஞ்சிய மீதி தொடர்பாக கண்டறிந்து 2019 இறுதிக் கணக்குகளூடாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கான தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாததனால் ரூபா 189,673,215 ஆன 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | குறித்த சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்க வேண்டும். | தேவையான கணக்காய்வு சான்றுகளை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **(அ) நகர சபை கட்டளை சட்டம்(255 ஆம் அதிகாரம்)** | | | |
| (i) 33 பிரிவு | சபைக்கு சொந்தமான திட்டவட்டமான ஆதனங்களில் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களில் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பேணப்பட வேண்டும். | 14 காணித் துண்டுகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய அனைத்து சொத்துக்களையும் உரிய அளவை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. |
| (ii) 177(2) பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுகளின் கணக்கு பொழிப்பறிக்கை ஒன்று மக்களின் அறிவூட்டலுக்காக அரச வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபை கட்டளை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| viii அத்தியாயத்தின் 10.1 பிரிவு | $^{1}/_{20}$ கொடுப்பனவு உரிமையில்லாத தொழில்நுட்ப அலுவலர்களுகு | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் | இலக்கம் EI/7/1/7/17 மற்றும் 2000.03.30 திகதிய மாகாண சபைகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டினுள் $^1/_{20}$ கொடுப்பனவாக ரூபா 41,749 செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்ய வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் தொழில்நுட்ப அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ளார். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | (i) நி.பி 565(3)(4)மற்றும் (5) | கடந்த ஆண்டுகளில் வைப்பு பேரேட்டு மீதிகளை முன்கொாண்டு சென்று இருக்காததுடன் மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்றையும் கணக்காய்வாளரிற்கு சமர்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (ii) நி.பி 571(2) | சபை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 03 வருடங்களை விஞ்சிய ரூபா 2,716,226 ஆன தொகையொன்றை வைப்பு கணக்குகளில் பேணிச் செல்கின்றது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்களை சரியாக கணக்கிட்டு 2020 ஆண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (iii) நி.பி.1647 (அ),(ஆ) | வாகன திருத்தத்திற்காக புதிதாக பொருத்தப்பட்ட உதிரிப்பாகங்கள் மற்றும் கலற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்களை பண்டக களஞ்சிய செலவுத் தாழி மூலம் பதிவிட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் ஆவணப்படுத்தி கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| **(ஈ)** | **2006 பெறுகைகள் வழிகாட்டி கோவை** | | | |
| | (i) 8.9.1 (அ) | இலக்கம் 49-9915 கொண்ட டெக்டர் வண்டி ரூபா 618,700 செலவில் திருத்தப்பட்டிருந்த போதும் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவை பிரகாாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 8.9.1 (ஆ) | வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாது மீளாய்வாண்டினுள் ரூபா 6,334,052 செலுத்தப்பட்டிருந்தது. | முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டும். | கடமை தேவைப்பாட்டின் மீது வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை செய்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 145,727,308 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 40,213,251 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 25,533 | 23,933 | 23,043 | 106,478 | 26,056 | 23,933 | 12,930 | 106,308 |
| (ii) | வாடகை | 11,276 | 13,456 | 16,112 | 30,193 | 38,014 | 7,433 | 34,389 | 32,021 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,220 | 870 | 870 | - | 1,001 | 899 | 899 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 612,448 | - | 146,189 | - | 410,974 | - | 188,753 | - |
| | கூட்டுத் தொகை | **650,477** | **38,259** | **186,214** | **136,671** | **476,045** | **42,265** | **236,971** | **138,329** |

மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டுகளில் நிலுவை வருமானத்திலிருந்து பெறுவனவும் உள்ளடங்கப்பட்டுள்ளது

#### 2.2.2 தகவல்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருமான நிர்வாகம் தொடர்பாக சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மேல் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களில் தவறுகள் காணப்பட்டன. | கணக்காய்விற்கு சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறொன்று ஏற்பட இடமளிப்பதில்லை என அறிக்கை செய்கிறேன். |

### 2.2.3 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலுவை வருமானம் மற்றும் கடன்படுனர் மீதி அறவிடல் உட்பட்ட சபையின் ஒட்டுமொத்த வருமான சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் பழவீன நிலையில் கானப்பட்டது. | வருமான சேகரிப்பு செயற்திறமையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அறிக்கையிடல் சரியாக வேண்டும். | நீண்ட காலமொன்றாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுதல் இதற்கு தாக்கம் செலுத்தியுள்ளதாக அறிக்கை செய்கிறேன். |

### 2.2.4 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வீதவரி தொகையான ரூபா 23,933,142 இலிருந்து ஆண்டினுள் ரூபா 7,203,257 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. அது சிட்டையிடப்பட்ட தொகையின் 30 சதவீதமானதுடன் மீளாய்வாண்டு இறுதி வரை சபையின் மொத்த வீதவரி நிலுவை கணக்கு பிரகாரம் ரூபா 106,477,668 ஆகக் காணப்பட்டது. | ஆண்டினுள் சிட்டையிடப்பட்ட வருமானத்தை ஆண்டினுள்ளே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ் வீதவரி தொகையினுள் நீண்ட காலமாக அறவிடப்படாது வருடாந்தம் உள்ளடங்கும் பெருமளவான வீதவரியும் உள்ளதுடன், அவற்றை பதிவழிப்பதற்காக மதிப்புக்குரிய ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மீது 2009 ஆண்டிற்கு முன்னரிலிருந்து அறவிப்படாத ரூபா 19,453,493 ஆன நிலுவை வாடகை மீதியை அறவிடல் நிச்சயமற்ற தன்மையில் இருந்ததுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை காலம் 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதி ரூபா 9,246,996 ஆகக் காணப்பட்டது. | நிலுவை கடையறை வாடகையை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நிலுவை மீதிகள் 2009 ஆண்டுக்கு முன்னரிலிருந்து நிலவி வரும் மீதியொன்றானதுடன், இறுதி கணக்குகளில் காட்டப்பட்ட போதும், தகவல்களை உறுதி செய்து கொள்ள பதிவேடுகளை கண்டறிய முடியவில்லை. |

**2.2.6 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலுவை ஏனைய வருமான அட்டவணை பிரகாரம் டென்டர் வருமானமாக ரூபா 1,029,527, நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 729,185 மற்றும் நாட்ச்சந்தை கட்டணமாக ரூபா 3,143,500 என்பதாக ரூபா 4,902,212 ஆன கூட்டுத்தொகை 03 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலுவையாக காணப்பட்டதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஏனைய வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | டென்டர் வருமானம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க எவ்வித ஆவணங்களையும் கண்டறிய முடியவில்லை. இறுதி கணக்கு தயாரிப்பதற்காக பெற வேண்டிய நீதிமண்ற தண்டப்பணம் தொடர்பாக விபரமொன்றை பெற்றுத் தருமாறு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் அறவிட்டு முடிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.7 நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,095,572 ஆனதுடன், சபைக்கு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பண அளவை இனங்கண்டு அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பனம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை உரிய முறையில் அறவிட வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் தொடர்பான விவரங்களை பெற்றுத்தருமாறு உரிய நிறுவனங்களுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 விடயங்களை மேற்கொள்ள உப விதிகள் விதிக்கப்பட வேண்யிருந்த போதும் 2019 திசெம்பர் 31 திகதி வரை எவ்வித் துணைச் சட்டமும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதித்து மக்கள் நலங்களை மேம்படுத்த செயற்பட வேண்டும். | நகர சபைக்கு தேவையான 06 உப விதிகளை விதிக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த செயற்பாடுகளிற்காக மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கை திட்டமொன்று (அபிவிருத்தி திட்டத்தின் பெயரில்) தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2014 பெப்ரவரி 17 திகதிய PED/RED/01/04/2014/1 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 04 பந்திக்கு இணங்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையில் காட்டப்படும் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | PED/RED/01/04/2014/1 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 04 பந்தியின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | சபையினால் வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 04 செயற்பாடுகள் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகளும் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | சொத்துக்களை தடை செய்தல், சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பீட்டறிக்கை விநியோகித்தல், வாகன தரிப்பிட கட்டுப்பாடு, செல்லப் பிராணிகள் மற்றும் பூங்கா பராமரிப்பு தவிர ஏனைய நடவடிக்கைகளிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வர்க்க கிலோ மீட்டர் 25.24 உடன் கூடிய புத்தளம் நகர சபை எல்லையினுள் தினந்தோறும் ஒன்று சேறும் 16 டொன் குப்பைகளிலிருந்து 4 டொன்கள் இயற்கை பசளை உற்பத்திக்காக அனுப்பப்பட்டு எஞ்சிய குப்பைகள் கொம்போஸ்ட் கொட்டிலிற்கு அருகில் திறந்த இடமொன்றிற்கு வெளியிடப்பட்டிருந்தது. அவ்விடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றிறுக்காததுடன் குப்பைகளை அழித்தல் மற்றும் முகாமைத்துவத்திற்காக உப விதி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | தினந்தோறும் ஒன்று சேர்க்கப்படும் குப்பைகளை உச்ச மட்டத்தில் மீள் சுழற்சிக்காக ஈடுபடுத்த கவனம் செலுத்தப்பட வேண்டும். | இக் கருத்திட்டம் பாரிய நடைமுறை சிக்கல்களுக்கு மத்தியில் நகர சபையினால் மேற்கொள்ளப்படுகிறது. கொம்போஸ்ட் கொட்டில் அமைந்துள்ள பிரதேசம் மக்கள் நடமாட்டம் இல்லாததுடன், அக் கொட்டிலிற்காக நீரை பெற்றுக் கொள்வது மிகக் கடினமாகவுள்ளது. இந் நிலையின் கீழ் பெறுமளவு இயற்கை பசளை உற்பத்தி செய்ய இயலுமை கிடைக்கவில்லை. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சசி நிரல் 2030) பற்றி நகர சபை அறிந்திருந்ததுடன், மீளாய்வாண்டில் 04 நோக்கங்களின் கீழ் வறுமை ஒழிப்பு, பல இனங்கள் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் ஆண் பெண் சமநிலையை ஏற்படுத்துதல் எனும் 04 இலக்குகளை இனங்கண்டு அதற்காக ஒதுக்கீடு ரூபா 1,525,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் அவ் இலக்குகளை அடைந்து கொள்ளும் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காணப்பட்ட 04 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் மீளாய்வாண்டினுள் 03 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை அடிப்படையின் மீது வாகன சேவையை பெற்றுக் கொள்ளல்** | | |
| மீளாய்வாண்டில் நகர சபை வாடகை அடிப்படையின் மீது 20 வாகனங்களை பெற்றுக் கொண்டு ரூபா 6,334,652 செலுத்தியிருந்ததுடன் பாதீட்டு ஒதுக்கீட்டையும் விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையின் மீது வாகனங்களை பெற்றுக் கொள்ள வருட ஆரம்பத்தில் ஒரு நிறுவனத்தை மாத்திரம் பதிவு செய்து கொண்டிருந்ததுடன் பெறுகைகள் நடைமுறை மேற்கொண்டதற்கான எழுத்து மூல சான்றுகள் இருக்கவில்லை. அவ்வாறே அலுவலர்களினால் வாகனம் விண்ணப்பிக்கும் திட்டவட்டமான ஒழுங்கு முறையொன்றை பின் பற்றிய இருக்கவில்லை. | வாகனங்களை வாடகைக்கு பெறும் போது ஒழுங்கான பெறுகைகள் முறைமை ஒன்றை பின்பற்ற வேண்டும். | 2019 ஆண்டிற்காக வாகன வாடகை அடிப்படையின் கீட் ஒரு நிறுவனம் மாத்திரம் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எம்மால் 2015 ஆண்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று கி.மீ 01 இற்காக ரூபா 35 தொகைக்கு எமக்கு சேவை வழங்க உடன்பட்டது. அதன் பிரகாரம், எம்மால் இது தொடர்பில் அந்நுறுவனத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. வாகனம் விண்ணப்பிக்கும் ஒழுங்கு முறையொன்று நடைமுறையாகுவதாக அறிக்கை செய்கிறேன். |
| **(ஆ) நிலுவை வருமானம் சேகரிக்கும் அலுவலர்களுக்கு தரகுப் பணம் செலுத்துதல்.** | | |
| 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் நிலுவை வருமானம் சேகரிக்க 04 அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந் நியமனங்களிற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இலக்கம் 1984/19 மற்றும் 1984 நவம்பர் 20 திகதிய சுற்றறிக்கையின் 08 பிரிற்கு இணங்க வருமானம் திரட்டுவதற்காக 7.5 சதவீத தரகர் பணம் செலுத்த வேண்டிய போதும் அதற்கு முரணாக தலா 10 சதவீதம் ரூபா 632,025 ஆன தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த சட்ட திட்டங்களிற்கு இணங்க ஊழியர்களை ஆட்சேர்க மற்றும் தரகுக் பணம் செலுத்த வேண்டும் | நகர சபைக்காக 04 வருமான பரிசோதகர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போது ஒரு வருமான பரிசோதக அலுவலர் மாத்திரம் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளதால் 255 அதிகாரம் நகர சபை கட்டளைச் சட்ட 36(அ) பிரிவின் கீழ் தலைவரினால் தரகு அடிப்படையின் கீழ் நிலுவை வீதவரியை அறவிட குறித்த நபர்களை நியமித்து 10 சதவீத தரகுப் பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) மேலதிக நேர கொடுப்பனவு செலுத்துதல்**

| | | |
|---|---|---|
| புததளம் நகர சபையில் சேவையாற்றும் 36 ஊழயிர்களிற்கு மாதாந்தம் ரூபா 200,000 அதிகமான தொகையை மேலதி நேர கொடுப்பனவாக செலுத்தியிருந்த போதும், விரல் அடையாள இயந்திரத்தில் குறிப்பிட்டிருக்காததுடன் மேலதிக நேர பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. | வேளை கொட்டிலிற்கு சேவைக்கு அறிக்கை செய்யும் ஆளணிக்காக விரல் அடையாள இயந்திரமொன்றை நிருவ வேண்டியதுடன், மேலதிக நேர பதிவேடும் பேணப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியதோடு 2020.06.18 திகதி நடந்த மகா சபையில் வேளை கொட்டிலிற்கு விரல் அடையாள இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய அங்கீகரித்துள்ளது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் வேளை கொட்டிலிற்கு விரல் அடையாள இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்து இப் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதாக அறிக்கை செய்கிறேன். |

**(ஈ) மிகையறவீடு செலுத்துதல்**

| | | |
|---|---|---|
| நகர சபை ஊழியர்களிற்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பஙகளிப்புப் பணம் செலுத்தாததால் விதிக்கப்பட்ட ரூபா 10,780 ஆன மிகையறவீட்டை அதற்கு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | சபை நிதியத்தினால் செலுத்தப்பட்ட மிகை அறவீட்டு பணத்தை பொறுப்பான அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டும். | அதன் போது இருந்த விடய பொறுப்பு அலுவலர்களை கண்டறிந்து குறித்த தொகையை அறவிட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(உ) வழக்கறிஞர் கட்டணம் செலுத்துதல்**

| | | |
|---|---|---|
| புத்தளம் செனகுடியிறுப்பு கிராமத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர், 02 ரூட், 33 பர்சஸ் விசாலமான ‘‘கஹனியர் புவர் தோட்டம்’’ எனும் காணி தொடர்பாக புத்தளம் மாவட்ட நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட இலக்கம் 1390/L கொண்ட வழக்கிற்காக வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 207,000 செலுத்தப்பட்டிருந்தது. இக் காணியின் உரிமையை உறுதி செய்ய நகர சபைக்கு எவ்வித சான்றுகளும் இல்லாததன் மீது நகர சபைக்கு பாதகமாகும் வகையில் வழக்கு தீர்ப்பு வழஙகப்பட்டு இருந்ததுடன் முறைப்பாட்டாளரிற்கு வழக்கு கட்டணம் செலுத்த வேண்டுமென தீர்வு செய்யப்பட்டிருந்தது. மேலும், வழக்கிற்கு சமுகமளித்த 48 நாட்கள் மற்றும வழக்கு விசாரிக்கப்பட்ட 12 | சபைக்கு சொந்தமான காணிகளின் உரிமையை உறுதி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன், குறித்த தினங்களில் வழக்கறிஞர் வழக்கிற்கு சமுகமளித்ததற்கான சான்றுகளை சமர்பதிக்க வேண்டும். | குறித்த காணியின் உரிமை நகர சபைக்குரியது என உறுதி செய்து கொள்ள போதுமான சான்றுகள் சபையிடம் காணப்படாததால் முறைப்பாட்டாளரிற்கு சார்பாக தீர்ப்பு கிடைத்துள்ளது. சபையினால் வழக்குத் தினங்களை உறுதி செய்து கொள்ள புத்தளம் மாவட்ட நீதிமன்றத்திற்கு தகவல்களை கோரியுள்ள போதும் இது வரை பதில் கிடைக்கவில்லை. |

நாட்கள் உள்ளடங்களாக 60 நாட்களிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 192,000 செலுத்துவதற்கான சான்றாக வழக்கறிஞரின் தனிப்பட்ட தினக்குறிப்பு புத்தகத்தின் பிரதி ஒன்று மாத்திரமே முன்வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் நிரைவேற்றுப் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்படுவதுடன் இரண்டாம் நிலை பதவி அங்கீகரிக்கப்பட்ட அளவின் அரைவாசி வெற்றிடமாக காணப்பட்டது. ஆரம்ப நிலை பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விஞ்சி ஒழுங்கான நியமனக் கடிதம் வழங்கப்படாத 77 தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டுக் கொண்டிருந்ததுடன் அப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையாக வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளவும் அங்கீகாரமில்லாத பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவிகளை அங்கீகரித்துக் கொள்வது தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதான செயலாளர் அறிவூட்டப்பட்டுள்ளார். |
| (ஆ) | **ஊழியர் கடன்** | | |
| | ஓய்வுபெற்ற, இடமாற்றம் பெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 77 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 196,320 ஆன கடன் மீதியொன்று 03 வருடங்களை விஞ்சிய காலமாக காணப்படுகின்றது. | அறவீடு தடைப்பட்டுள்ள ஊழியர் கடன் மீதிகளை அறவிட ஒழுங்கான நடைமுறையொன்றை எடுக்க வேண்டும். | பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ஊழியர் கடன் தொடர்பாக எவ்வித தகவல்களையும் கணடறிய முடியாததால், அம்மீதிகளை ஆவணங்களிலிருந்து அகற்ற சபை தீர்மானமொன்றை எடுத்து மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தை கோரியுள்ள போதும் இது வரை அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை. |
| (இ) | **ஊழியர் பிணை** | | |
| | 2008, 2016 மற்றும் 2019 ஆண்டுகளில் 31 நபர்களிடமிருந்து அறவிட்டிருந்த ரூபா 42,698 ஆன பிணைப் பணத்தை முதலீடு செய்திருக்கவில்லை. | ஊழியர் பிணைப் பணத்தை முதலீடு செய்ய வேண்டும். | அது தொடர்பாக தேவையான முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 1,126,203 ஆன நாட்சில்லு டெக்டர் ஒன்று, கல்உருளை ஒன்று, இரண்டு சில்லு டெக்டர் ஒன்று மற்றும் மூன்று மோடார் சைக்கில்கள் 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரையான காலமொன்று விளைவற்று காணப்பட்டது. | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி தொழிநுட்ப பொறியியலாளரின் பரிந்துரையின் மீது 37-8589 இலக்க டெக்டர் வண்டி, 156-7580 இலக்க மோடார் சைக்கில், HY 8815 இலக்க மோடார் சைக்கில் மற்றும் HL-M99 இலக்க Land master யை ஏலத்தில் விற்கவும் RR-99 இலக்க Road Roller இயந்திரத்தை தொல் பொருள் ஒன்றாக காட்சிப்படுத்தவும் சபை தீர்மானித்துள்ளது. |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிபப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | பெறுகைகள் திட்டமொன்று வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை அதிகார எல்லையில் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும சபையின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல மீளாய்வாண்டில் 31 செலவு விடயங்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 77,095,000 ஆன மொத்த ஒதுக்கீடும் குறித்த செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டின் மூலம் ஓதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளை ஆண்டினுள் மேற்கொள்ள வேண்டும். | மத்திய அரசு விநியோகித்த நிதிக் கட்டளையான வாகன கொள்வனவிற்கு ஒதுக்கிய ஏற்பாடு எஞ்சியுள்ளதுடன், குறித்த அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காததன் மீது காணி கொள்வனவிற்கு ஒதுக்கிய ஏற்பாடும் எஞ்சியுள்ளது. நாட்டில் காணப்பட்ட அடிப்படைவாதப் பிரச்சினை காரணமாக உத்தேச வேலைத் திட்டங்களை |

| | | |
|---|---|---|
| | | திட்டமிட்டு செயற்படுத்த முடியாது போனதால் மற்றைய ஓதுக்கீடு எஞ்சியதாக அறிக்கை செய்கிறேன். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன், 2019 ஜனவரி மாதத்தில் கொடுபனவு வவுசர் பரிசோதனை மாத்ததிரம் உள்ளக கணக்காய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயற்பாட்டு செயன்முறையை மேம்படுத்தல் மற்றும் செயற்திறனை உயர்த்தக் கூடிய வகையில உள்ளக கணக்காயவு திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டில்லாததுடன், 2020 ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வு குழுவை பலப்படுத்தவும் தேவையான செயற்பாடுகளை ஒழுங்கு முறையாக மேற்கொள்ள தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் அப்பிரிவிற்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |